சின்னசேலம், கள்ளக்குறிச்சி, செஞ்சி, தியாகதுர்கம், சங்கராபுரம், அவலூர்பேட்டை, மரக்காணம், விக்கிரவாண்டி, வளத்தி ஆகிய 13 இடங்களில் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அனந்தபுரம், திருவெண்ணெய்நல்லூர், மணலூர்பேட்டை, மூங்கில்துறைப்பட்டு ஆகிய 4 இடங்களில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மிகப் பெரிய அளவில் வியாபாரிகளும், விவசாயிகளும் வந்து செல்லக்கூடிய ஒரு இடமாக இருக்கக்கூடிய காரணத்தினால், அதற்கு இடவசதி, கட்டட வசதிகள் தேவையென்றால் அரசு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**12—**

**நீதிமன்றக் கட்டடம்**

***31002—திரு. ஆர்.எம். பழனிசாமி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூ.375 இலட்சங்களுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, 10-9-2008 அன்று டெண்டர் வைக்கப்பட்டு, அந்த டெண்டர், அரசினுடைய Tender Award Committee-க்குச் சென்றிருக்கிறது. அவர்களுடைய ஒப்புதல் வந்த பிறகு பணி துவங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

2008 நவம்பர் 12]

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு ஒருங்கிணைந்த நீதிமன்றம் மற்றும் நீதிபதிகள் குடியிருப்புக்கு 5-4-2008-லே நம்முடைய அமைச்சரால் அடிக்கல் நாட்டப்பட்டு, நீதிமன்ற வளாகத்திற்கு ரூ.3.75 கோடியும் அதை திருவாளர்கள் எஸ்.எஸ். நடராஜன் அன்டு கோ.-க்கும், அதேபோல நீதிபதிகள் குடியிருப்பை திருவாளர்கள் யுவராஜ் அவர்களும் ரூ.1.67 கோடியில் டெண்டர் எடுத்துக் கட்டினார்கள். கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு காரணமாக 30 சதவீதம் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டதற்கு பொதுப் பணித் துறையில் 23 சதவீதத்திற்கு மேலே கொடுக்க முடியாது என்று சொன்ன நிலையில் அது Tender Award Committee-க்குச் சென்றிருக்கிறது என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். நிச்சயமாக அந்த 23 சதவீதத்திற்கு நம்முடைய பொதுப் பணித் துறை கோருகிற அளவுக்கு அந்த ஒப்பந்தக்காரர்கள் தயாரான நிலையிலே இருக்கிறார்கள் என்ற செய்தியையும் இன்றைக்கு நான் அறிந்தேன். இந்தக் கோரிக்கை 1988-லிருந்து பல்லாண்டுகாலமாக உள்ளது. நம்முடைய மரியாதைக்குரிய தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய அரசு, ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் அங்கே நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டித் தரப்படும் என்ற நல்ல செய்திக்கு நன்றி சொல்லி, அதேநேரத்தில், அந்த ஒப்பந்ததாரர்களை அழைத்துப் பேசினால் நிச்சயமாக அந்தப் பணியை 23 சதவீதத்திலே நம்முடைய துறை சார்ந்த அளவிலேயே முடிக்க இயலும். அதற்கு Award Committee-மூலமாக உடனடியாக நடவடிக்கை வேண்டுமென்று கேட்டு, அந்த அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு excess போட்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதிலிருந்து அவர்கள் 23 per cent அதிகம் போட்டிருக்கிறார்கள் எனத் தெரிகிறது. (குறுக்கீடு) 30 per cent கேட்டு 23 சதவீதத்திற்கு வந்திருக்கிறார்களா? கிடைக்கவே கிடைக்காது. ஏனென்று சொன்னால், துறையில் 5 per cent-க்கு மேலே கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். காரணம் இன்றைக்கு இரும்பு விலை இறங்கிவிட்டது. எல்லா விலைகளும்

குறைந்திருக்கின்றன. ஒரு டெண்டரில் இத்தனை per cent அதிகம் போடுகிறோம் என்று கேட்டால், ஏன் அவ்வளவு போட வேண்டும் என்பதற்குக் காரணம் சொல்ல வேண்டும். காரணம் சொன்னால்தான் Finance Department-ல் ஒத்துக்கொள்வார்கள். இஷ்டத்திற்குப் போட்டோம் என்றால் இதற்கு ஏன் இவ்வளவு போட்டிருக்கிறீர்கள் என்று கேட்பார்கள். ஆகையினால், எந்த அளவில் பார்த்தாலும் அந்த 23 சதவீதம் என்பது கிடைக்கவே கிடைக்காது. ஆகவே, அவர்கள் negotiation-க்கு வந்தார்களானால் அதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடியிலே உள்ள குற்றவியல் நீதிமன்றமும், உரிமையியல் நீதிமன்றமும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அவற்றுக்கு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும். அதேபோல், கொடுமுடி என்பது ஈரோடு பகுதியிலே தாலுகா அளவிலே, வட்ட அளவிலே இருக்கிற மிகப் பெரிய பகுதி. மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட பகுதிகளை எல்லாம் பிரித்து சார்பு நீதிமன்றம் ஒன்றும், குற்றவியல் நீதிமன்றம் ஒன்றும் அமைச்சர் அமைத்துத் தருவாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து விவரமாக எழுதிக் கொடுப்பாரேயானால் அடுத்த நிதியாண்டில் பகுதி திட்டத்திலோ அல்லது வேறு திட்டத்திலோ எடுக்கலாமா என்பதை அரசு நிதிநிலைமைக்கு ஏற்ப ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தை 1996 ஆம் ஆண்டு வேலூரில் ஒரு கட்டடம் கட்டித் திறந்தார்கள். அதிலே B-Block-ஐ கட்டித் திறந்துவிட்டார்களேயொழிய, A-Block இல்லாமல் விட்டுவிட்டார்கள்.

2008 நவம்பர் 12]

A-Block-ம், B-Block-ம் சேர்ந்தால்தான் அது ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகமாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேலூரில் A-Block கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, A-Block, B-Block இணைந்தால்தான் ஒருங்கிணைந்த நீதிமன்றம் என்று அல்ல. மாண்புமிகு உறுப்பினர் எப்போது பார்த்தாலும் B-Block-ஐ கட்டிவிட்டார்கள், A-Block-ஐ கட்டவில்லை என்கிறார். இந்த B-Block-கிற்கு, A-Block என்று நாங்கள் பெயர் வைத்துவிடுகிறோம். ஆனால், மற்ற நீதிமன்றங்களை நடத்துவதற்கும் போதிய இடம் அங்கு கட்டப்பட்டுள்ள கட்டடத்திற்குள் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அது இருக்கிறது. ஆனால், இன்னொரு நீதிமன்றக் கட்டடம் கட்ட வேண்டும் என்பதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. உரிய நேரத்தில் கட்டப்படும். அவருக்கு எவ்வளவு அக்கறை உண்டோ, அதே அளவு எனக்கும் அக்கறை உண்டு.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு துவக்கப்பட்ட மாவட்ட அமர்வு நீதிமன்றம் உட்பட தருமபுரி நகரில் 8 நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கே ஏறக்குறைய 300 வழக்கறிஞர்கள் பணியாற்றி வருகிறார்கள். இவற்றில் குற்றவியல் நெம்பர்-1 நீதிமன்றமானது வழக்கறிஞர்களுடைய சங்கக் கட்டடத்திலே தற்போது இயங்கி வருகிறது. அதைப்போலவே மாவட்டத் தலைமைக் குற்றவியல் நீதிமன்றமானது பெண்ணாகரம் சாலையிலுள்ள ஒரு தனியார் கட்டடத்திலே வாடகைக்கு இயங்கி வருகிறது. தற்போது நெடுஞ்சாலைத் துறையானது ஆக்கிரமிப்பை அகற்றுகின்ற காரணத்தினாலே அந்தக் கட்டடமும் தற்போது இடிக்கப்படுகின்ற நிலையில் இருக்கின்றது. அதைப் போலவே, தொழிலாளர்கள் நீதிமன்றத்திற்குப் போதிய கட்டட வசதியில்லாமல், அதுவும் சரிவர செயல்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே பொது மக்களுடைய நலன் கருதி, இந்த நீதிமன்றங்கள் சரியாகச்

செயல்பட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டித் தர ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன என்பதை மறுக்க முடியாது. சொந்தக் கட்டடத்திலே நீதிமன்றங்கள் நடைபெற வேண்டும் என்பது தலைவர் கலைஞர் ஆட்சியினுடைய நோக்கம். அதற்காகத்தான் ஆட்சிக்கு வந்தவுடனே, 300 கோடி ரூபாயை முதலிலே ஒதுக்கித் தந்தார்கள். 2007-2008, 2008-2009, 2009-2010, 2010-2011-க்கு. சென்ற முறை 100 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆக 300 கோடி ரூபாயை நீதித் துறைக்கு ஒதுக்கிய ஒரேயொரு ஆட்சி கலைஞருடைய ஆட்சிதான் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவின் எல்லா மாநிலங்களில் இருக்கிறவர்களும் நீதித் துறைக்கு தமிழக அரசு செய்கிற பணியை எல்லா மட்டங்களிலும் பாராட்டுகிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கிற நீதிமன்றங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்க வேண்டும் என்பதற்காகத்தான் ஒவ்வொரு ஆண்டும் தலைவர், முதல்வர் கலைஞர் அவர்கள், 20, 30 ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்களைக் கட்டுவதற்கு அனுமதியளிக்கிறார்கள். சென்ற 2008-2009 ஆம் ஆண்டில்கூட 22 ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் கட்டுவதற்கு அனுமதியளித்திருக்கிறார்கள். அதே நேரத்திலே ஒவ்வொரு ஆண்டும் புதிய, புதிய நீதிமன்றங்களையும் துவக்கிக் கொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு ஆண்டும் 30, 40 நீதிமன்றங்களை நாம் பல்வேறு வகைகளிலே துவக்கிக் கொண்டிருக்கின்றோம். எனவே, ஒரு பக்கம் புதிய, புதிய நீதிமன்றங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஒரு பக்கத்திலே ஆண்டொன்றுக்கு 20, 25, 30 நீதிமன்றக் கட்டடங்களைக் கட்டிக் கொண்டிருக்கின்றோம். எது எப்படி இருந்தாலும் இந்த ஆட்சியினுடைய காலத்திற்குள்ளாக எல்லா நீதிமன்றங்களும் சொந்தக் கட்டடத்திலே இயங்க வேண்டுமென்ற முடிவோடு இந்த அரசு செயலாற்றுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குன்னூர் தொகுதியில், கோத்தகிரி பகுதி மலைப் பிரதேசமான பகுதியாகும். மேலும் வருவாய்த் துறைக்குச்

2008 நவம்பர் 12]

சொந்தமான தாசில்தார் அலுவலகக் கட்டடத்திலேயே நீதிமன்றம் இயங்கி வருகின்ற காரணத்தினால், கோத்தகிரியில் வரும் நிதியாண்டில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் கட்டப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய கருத்தை எழுதித் தந்தால் அடுத்த ஆண்டு நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்று வேறொரு மாண்புமிகு உறுப்பினருக்குச் சொன்னதையே இவருக்கும் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் வேண்டி, கடந்த 15 நாட்களாக, மாவட்டத் தலைநகரான திருவள்ளூரிலே வழக்கறிஞர்கள் வேலை நிறுத்தத்திலும், சாலை மறியலிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். அங்கே போதுமான இட வசதி இருந்தும்கூட இன்றைக்கு வரை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தைக் கட்டித் தருவதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும், இந்த அரசு அந்தப் பகுதியிலே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டித் தருவதற்கு ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன். அதைப்போல, திருத்தணியிலே சார்பு நீதிமன்றம் அமைப்பதற்குத் தேவையான கட்டடங்கள் இருந்தும் இன்னும் அது துவக்கப்படவில்லை. அதைத் துவக்க இந்த அரசு முன்வருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் கட்டப்படும் என்று நாங்கள் இங்கே அறிவிக்கிறோம். ஒரு பள்ளிக்கூடம் கட்டப்பட வேண்டுமென்றால் அரசு உடனே அதற்கு நிதியொதுக்குகிறது. அரசே ஓர் இடம் கொடுக்கிறது. உடனே கட்டி முடித்துவிடுகிறோம்.

[2008 நவம்பர் 12

நீதிமன்றங்கள் அப்படியல்ல. இந்தந்த ஊரில் இந்த ஆண்டு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டப்படும் என்று அறிவித்தவுடன், அந்த அறிவிப்பை அரசு உயர் நீதிமன்றத்திற்குக் கொடுக்கிறது. உயர் நீதிமன்றமோ மாவட்டத்தில் இருக்கிற நீதிமன்றங்களுக்கு அதை அறிவுறுத்துகிறது. அறிவுறுத்தி இடத்தைத் தேர்வு செய்யும்படி சொல்கிறது. அவர்கள்தான் நமக்கு இடம் தேர்வு பண்ணிக் கொடுக்க வேண்டும். உயர் நீதிமன்றம், அந்த local-லே இருக்கிற மாவட்ட நீதிமன்றங்களுக்கு அனுப்பி, அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொடுக்கிறார்கள். தேர்ந்தெடுத்துக் கொடுத்ததை, இந்த இடத்திலே உங்களுக்கு இடம் தேர்ந்தெடுத்துக் கொடுக்கிறோம் என்று உயர் நீதிமன்றம் நமக்குத் தெரிவிக்கிறது. தெரிவித்ததற்குப் பிறகு P.W.D building division வளாகம் எப்படிக் கட்ட வேண்டும் என்று ஒரு estimate போடுகிறார்கள். அந்த estimate copy-யை நாங்கள் High Court-க்கு அனுப்ப வேண்டும். High Court-ல், அவர்கள் எப்போதாவது ஒரு முறை கூடி இதில் ஒரு முடிவெடுப்பார்கள். அந்த கமிட்டி அடிக்கடி கூடாது. அவர்கள் அதிலே 2 amendments கொடுப்பார்கள் அல்லது changes கொடுப்பார்கள். உடனே அதை எங்களுக்கு அனுப்புவார்கள். அதற்கு மறுபடியும் re-estimate போட்டு மறுபடியும் அவர்களுக்கு அனுப்பப்படும். அவர்கள் o.k பண்ணியதற்கு அப்புறம்தான் அதற்கு full sketch போட்டு drawing வரைந்து estimate போடுவார்கள். Estimate போட்டு மறுபடியும் High Court-க்கு அனுப்ப வேண்டும். High Court-ல் sanction பண்ணியதற்குப் பிறகு, A.S. வாங்கியபிறகு டெண்டருக்குப் போக வேண்டும். ஆக இந்தக் காலகட்டத்தில் ஒவ்வொரு செயலுக்கும் உயர் நீதிமன்றத்தினுடைய அனுமதியைப் பெற வேண்டியிருக்கிற காரணத்தால்தான் அறிவிக்கப்பட்ட நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதிலே தாமதம் ஏற்படுகிறது. உதாரணத்திற்கு, அதை நான் வெளிப்படையாகச் சொல்வதில் ஒன்றும் கஷ்டமில்லை. உயர் நீதிமன்றத்திலே, எல்லா நீதிமன்றங்களையும் எக்மோரிலே கட்டவேண்டுமென்று 17 கோடி ரூபாய் கேட்டார்கள். சைதாப்பேட்டை மற்றும் ஜார்ஜ் டவுனில் இருக்கிற கோர்ட்டுகளுக்கு என்று 19 கோடி ரூபாயை அரசு ஒதுக்கியது. ஆனால், திடீரென்று பார்த்தால் அந்த இரண்டு கோர்ட்டுகளில் இருக்கிறவர்களும் நாங்கள் இங்கே வரமாட்டோம் என்றார்கள். உடனே சரி, தேவையில்லை, ஜார்ஜ் டவுன் கோர்ட் அங்கேயே இயங்கட்டும். இங்கே சைதாப்பேட்டை கோர்ட் இயங்கட்டும் என்று சொன்னார்கள். அப்படியானால் revised estimate போட்டு இந்த 19 கோடி ரூபாயைக் குறைக்க வேண்டுமென்று நாங்கள் சொன்னோம். உடனே High Court

சொன்னது, முடியாது, முடியாது, 19 கோடி ரூபாய் ஒதுக்கியது ஒதுக்கியதுதான். ஜார்ஜ் டவுன் கோர்ட் வந்தாலும் சரி, சைதாப்பேட்டை கோர்ட் வந்தாலும் சரி, இந்த 19 கோடியை எக்மோர் கோர்ட்டிலேயே நீங்கள் செலவு பண்ண வேண்டும் என்றார்கள். இப்படி சில நேரங்களில் கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின்றன. இதனால் சில நேரங்களில் காலதாமதம் ஏற்படுகிறது. அதற்காகத்தான் 2 வாரங்களுக்கு முன்னால் Registrar -ஐ அழைத்து, Home Secretary, Finance Secretary-ஐ இவர்களோடு ஒரு discussion வைத்து, ஒரு முறை போனால் போதும், அடிக்கடி எல்லாவற்றுக்கும் High Court போகத் தேவையில்லை என்று முடிவெடுத்திருக்கிறோம். அதனால் இனிமேல் கொஞ்சம் சற்று விரைவாக நடைபெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் நகரில் ஒரு குறுகலான தெருவிலேயே நீதிமன்றம், சார் பதிவாளர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், காவல் நிலையம் போன்றவை இருப்பதனால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். வெளியூரிலிருந்து வருகிறவர்களுக்கு எது எந்த அலுவலகம் என்று தெரியாமல் குழம்பும் நிலை உள்ளது. இப்படி இருக்க நீதிமன்றத்திற்குத் தனி இடம் இருந்தும் கட்டடம் கட்டித் தரப்படவில்லை. கடந்த நிதியாண்டிலேயே அமைச்சரிடம் நான் இதைக் கேட்டிருந்தேன். இந்த நிதியாண்டிலாவது அமைச்சர் இதைக் கட்டித் தர முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் இருக்குமானால் அடுத்த நிதியாண்டில் அதை எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இன்று பல்வேறு பிரச்சினைகளிலே நீண்ட விளக்கங்களை

அளித்திருக்கிறார்கள். அதிலே இருக்கிற சிக்கலையும் இங்கே சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சிக்கலெல்லாம் தீர்க்கப்பட்டு ஒருங்கிணைந்த நீதிமன்றம் செங்கல்பட்டிலே இயங்கிக் கொண்டிருக்கிறது. அதில் தொழிலாளர் நீதிமன்றம் இல்லாமல் இருக்கிறது. அந்த நீதிமன்றமும் வருவதற்கான ஏற்பாட்டை நம்முடைய அமைச்சர் அவர்கள் செய்வார்களா? அதேபோன்று திருக்கழுக்குன்றம் நீதிமன்றம் நீண்ட நாட்களாக வாடகைக் கட்டடத்தில் இங்கிக்கொண்டிருக்கிறது. அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கும் முயற்சி எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவரது கருத்தை எழுதிக் கொடுத்தால், நிதிநிலை அறிக்கையின்போது அதைப் பற்றி யோசிக்கலாம். (குறுக்கீடு) Assurance எப்படிக் கொடுக்க முடியும்? நீங்கள் எழுதிக் கொடுங்கள். எப்படியும் demand-ல் வரப் போகிறது. இரண்டு கேட்டிருக்கிறீர்கள். அதிலே ஒன்றாவது தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13. மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**13—**

**தகுதிச் சான்றிதழ்**

***38000—திரு. மா. தண்டபாணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல ஆண்டுகள் இயக்கப்பட்ட கனரக வாகனங்களுக்குத் தகுதிச் சான்றிதழ் வழங்குவதற்கான விதிகளைக் கடுமையாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,